UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, January -2024 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இலக்கியம் சித்திரிக்கும் சேரர்களின் நகர அமைப்பு

முனைவர் த. தட்சணா மூர்த்தி
செயிண்ட். ஸ்டீபன் கல்லூரி
தில்லி

*சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தை சேரர், சோழர், பாண்டியர் என்னும் முப்பெரும் மன்னர்க் குடிமரபினர் ஆண்டு வந்துள்ளனர். இம்முப்பெரும் வேந்தர் வரிசையில் தொல்காப்பியர் சேர மன்னரை முதலில் குறிப்பிடுகிறார். சேர நாடு பெரிதும் மலையும், காடும், கடலும் சூழ்ந்த இயற்கை அமைப்பினைக் கொண்டது. மலை, காடு, கடல் என்ற இயற்கை அரண்கள் சூழ அமைந்த ஊர்கள் இயல்பிலே மிகவும் பாதுகாப்பு மிக்கவை என நகரமைப்பு நூல்கள் கூறுகின்றன. இவ்வியற்கை அமைப்பு, நகரங்களைப் பாதுகாப்பான முறைகளில் கட்டமைக்கச் சேர நாட்டினர்க்கு எளிதில் கைகொடுத்தது. இதன் மலைநிலத்தில் மிகுதியாகக் காணப்படும் யானைகள் சேர மன்னர்களின் படைபலத்திற்கு வலிவைக் கூட்டின. பகைநாட்டினரின் எயில்களைத் தாக்கிச் சிதைத்து அழிக்கும்படியான பயிற்சியை யானைகளுக்குச் சேர மன்னர் திறம்பட அளித்திருந்தனர். கடல்புரத்து வாழ்விடங்கள் சேர நாட்டில் மிகுதி. ஆதலால், தோணி/கலம்/நாவாய் செலுத்துவதிலும், கடல் வாணிபத்திலும் மற்ற வேந்தர்களைவிடச் சேர மன்னர் சிறந்து விளங்கினர். பெரும்சிறப்புற்றிருந்த இம்மன்னர்கள் தங்களின் தலைநகரத்தை எங்ஙனம் கட்டமைத்திருந்தனர் என்பதை இலக்கியங்களின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.*

**வஞ்சி**

*பழங்காலச் சேரநாட்டின் தலைநகரம் வஞ்சி மாநகரம் ஆகும். இந்நகரம் பொருநை ஆற்றங்கரையினில் அமைந்திருந்தது. வஞ்சி நகரத்தினைச் சுற்றிப் பல ஊர்கள் அமைந்திருந்தன. அவ்வூர்களில் நெல்வளம் சிறந்திருந்தது.*

*............ வஞ்சிப் புறமதில் அலைக்கும்*
*கல்லென் பொருநை மணலினும் ஆங்கண்*
*பல்லூர் சுற்றிய கழனி*
*எல்லாம் விளையும் நெல்லினும் பலவே.* (பு.நா. 387: 33-36)

*நகரமைப்பு நூல்கள் வரைவிலக்கணப்படி, இம்மாநகரமும் அதனைச் சுற்றிப் பல ஊர்களும் பொருநை ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைந்திருந்தன. இத்தலைநகரின் நடுவே அரண்மனை இடம்பெற்றிருந்தது. இந்த அரண்மனை குறித்த கீழ் வரும் சிலப்பதிகாரப் பதிவு கருதத்தக்கது. அலை ஒலிக்கும் கடல் சூழ்ந்த இப்பெரிய பூவுலகின் நடுவே, உயர்ந்தோங்கி நிற்கும் மேருமலையைப் போல, கொடிகள் பறக்கும் பெரிய மதிலுடைய வஞ்சி மாநகரின் நடுவில், தங்கத் தகடு வேய்ந்த மன்னனின் மாளிகை அமைந்திருந்தது.*

*படுதிரை சூழ்ந்த பயம்கெழு மாநிலத்து*
*இடைநின் றோங்கிய நெடுநிலை மேருவின்*

*கொடிமதில் மூதூர் நடுநின் றோங்கிய*

*தமனிய மாளிகை ........ ........*

*(சி.அ. 28: 47-50)*

இத்தொடர்களின் கூற்றுகள் வழியும், நகரமைப்பு வரைவிலக்கண நூல்களின் கூற்றுகள் வழியும் பழங்காலத்தில் அரண்மனை (கோவில்/கோயில்) என்பது தலைநகரின் மையப்பகுதியிலேயே அமைந்திருந்தது என்பது தெரிய வருகிறது. வஞ்சி மாநகரம் அகநகர், புறநகர் எனும் இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அகநகரில் அரண்மனை வீற்றிருந்தது. இந்நகர் ஆற்றங்கரையில் அமைந்திருந்ததால் இதன் புறநகரில் துறைமுகம் இடம் பெறவில்லை. இங்குக் குறிக்கப்படும் புறநகர் இவ்வஞ்சி நகரத்தின் அகநகருக்கு வெளியில் அமைந்திருந்தது.

### நகர் அமைப்பு

இந்நகரத்தின் புறநகர் அமைப்பு பற்றிய தெளிவான விளக்கங்கள் இல்லை. எனினும் இப்புறநகரைப் பற்றி மணிமேகலையில் ஒரு சில செய்திகள் காணப்படுகின்றன. மணிமேகலை புத்தமதம் தழுவிய பின்னர் அம்மதக் கொள்கையினைப் பரப்ப வஞ்சி மாநகர் செல்கிறாள். அங்குப் புறநகரில் இருந்த பிற சமயத்தாரின் கொள்கைகளைக் கேட்டறிகிறாள்.

*தேவ குலமும் தெற்றியும் பள்ளியும்*

*பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து*

*நற்றவ முனிவரும் கற்றடங் கினரும்*

*நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்*

*எங்கணும் விளங்கிய எயிற்புற விருக்கையில் (ம.மே. 26: 72-76)*

புறநகரில் கடவுளர் கோயிலும், வேதிகையும், சாலையும், அழகிய பூஞ்சோலையும், வாவியும் நெருங்கி இருந்துள்ளன. நற்றவம் புரிந்த முனிவரும், மறைநூல் பயின்று அதன்படி நடப்போராகிய அறவோர் வாழும் இடமும், அறநெறி கடைப்பிடித்த பழம்பெரும் நூல்களில் பயிற்சி மிக்க புலவர் வாழும் இடமும் வஞ்சியின் புறப்பகுதியினை ஒட்டி அமைந்திருந்தன. இப்பகுதிகள் எயிலுக்குப் புறத்தில் வீற்றிருந்தன. இச்செய்தி கீழ் வரும் தொடர்களால் தெளிவாகிறது.

*வாங்குவிற் றானை வானவன் வஞ்சியின்*

*வேற்று மன்னரு முழிஞைவெம் படையும்*

*போற்புறஞ் சுற்றிய புறக்குடி கடந்து*

*(ம.மே. 28: 2-4)*

இந்தப் புறமதிலில் பொருநை நதியின் அலைகள் மீண்டும் மீண்டும் வந்து மோதிய வண்ணம் இருந்தன.

*புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்*

*கல்லெனும் பொருநை ......... ..........*

*(பு.நா. 387: 33-34)*

வளைந்த வில்லேந்திய படையினையுடைய சேரனது வஞ்சி நகரத்தில் பகை மன்னரும் அப்புறமதிலைக் காக்கும் கொடிய படையினர் போல அரணைச் சுற்றிலுமுள்ள புறநகரத்தைக் கடந்து சென்றனர். புறக்குடி, புறநகர், மன்னவர் குமரர் இருக்கை, தானைவீரர் இருக்கை என்பன அரணைச் சுற்றி அமைந்திருத்தல் வேண்டும் என்பர் துரைசாமிப் பிள்ளை (ம.மே. 2015: 438). இந்த வஞ்சி நகரின் புறநகர் அகழிக்கு வெளிப்புறத்தில் வீற்றிருந்தது. அப்புறநகரிலேதான் அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிக வாதி, பூதவாதி என்னும் சமயக்கணக்கர் பலர் இருந்து தத்தம் சமயக் கொள்கைகளை எடுத்தோதி வந்தனர் (இராசமாணிக்கனார் 2012: 159).

### குணவாயிற்கோட்டம்

வஞ்சி மாநகரின் புறநகர்ப் பகுதியில் சமண முனிவர்கள் தங்கி வசித்த கோட்டம் ஒன்று இருந்தது. அரச வாழ்வைத் துறந்து துறவு மேற்கொண்ட இளங்கோஅடிகள் தங்கியிருந்த கோட்டமும் இப்பகுதியிலேயே இடம் பெற்றிருந்தது (பார்த்தசாரதி 1992: 218). இக்கோட்டம், சமயவாதிகள் பலர் வசித்திருந்த வஞ்சியின் புறநகர்ப் பகுதியிலேயே இடம்பெற்றிருந்தது. குண என்பது கிழக்குத் திசையைக் குறிக்கிறது. வாயில் என்பது உள்வரும் பகுதியாகும். ஆக, குணவாயில் என்பது கிழக்குவாசல் எனப் பொருள்படும்.

### வேளாவிக்கோ மாளிகை

சிலப்பதிகாரத்தில் வஞ்சி மூதூர்ப்

புறத்தில் அமைந்த ஒரு மாளிகை பற்றி குறிப்பு ஒன்று காணப்படுகிறது.

*ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்*

*பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்து*

*தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்*

*வேளா விக்கோ மாளிகை காட்டி*

*நன்பெரு வேள்வி முடித்தனன் பின்னாள்*

*தம்பெரு நகர்ச் சார்வதும் சொல்லியம்*

*மன்னவர்க்கு ஏற்பன செய்க நீ*

*(சி.அ. 28: 195-201)*

ஆரிய அரசர்களின் சிறை விலங்குகளை நீக்கி, நீரே வேலியாக அமைந்துள்ள பூம்பொழில் உள்ள ஆவிக்கோ எனும் பெயர் அமைந்த மாளிகையைச் சிறையிலிருந்து விடுதலை செய்து அவ்வரசர்கள் தங்குமிடமாகச் சேர மன்னர் சமைத்துள்ளனர். இவ்வேளாவிக் கோ மாளிகை கடற்கரையின் அருகினில் இருந்தது என்கிறார் வேங்கடசாமி (2003: 58). அவர்தம் கருத்து ஏற்குமாறு இல்லை. தாழ் நீர் என்பதற்குக் கடல் எனப் பொருள் கொண்டுள்ளார் அவர். ஆயின் தாழ்நீர் என்ற சொல்லுக்கு அகழி என்ற பொருளும் உண்டு. இதுவே சரியானது எனலாம். அகநகரை அடுத்த புறநகர் எல்லையினில் இருந்த மாளிகையாக இதைக் கொள்ளலாம். இது வேள் ஆவிக்கோ என்னும் வள்ளலுக்கு உரியது. சேர அரசர்கள் இம்மாளிகையில் அடிக்கடி சென்று தங்குவது உண்டென்று தெரிகிறது (பார்த்தசாரதி 1992:218). பிற நாட்டு அரசர்கள் தங்குவதற்கும், சில நேரங்களில் அந்நாட்டு மன்னர்களும் ஓய்வு கொள்வதற்கும் இத்தகைய மாளிகைகள் உருவாக்கப் பெற்றிருந்தன.

**அகநகர்**

வஞ்சியின் புறநகரை அடுத்து அகநகர் என்ற பகுதி அமைந்திருந்தது. இந்தப் பகுதியில் அகழி, மிளை, மதில் என்பன இடம்பெற்றிருந்தன. இப்பகுதியில் மக்களும் மன்னரும் படைவீரர்களும் வசித்திருந்தனர். புறநகரை அடுத்தமைந்த பகுதியில் அகழி இடம்பெற்றிருந்தது. இந்த அகழி நகரின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட இன்றியமையா உறுப்பு களில் ஒன்றாகும். மன்னர் வைகும் இராசதானி நகரக் கட்டமைப்பில் அகழிக்கு முக்கிய இடம் உண்டு. இது மிகவும் ஆழமானது; நீர் நிறைந்தது. இதில் முதலைகள் விடப்பட்டிருந்தன. அகழியின் அமைப்பைக் கீழ் வருமாறு விவரிக்கிறது மணிமேகலை.

*சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்*

*கருங்குழல் கழீஇய கலவை நீரும்*

*எந்திர வாவியி லிளைஞரு மகளிரும்*

*——பூமிசைப் பரந்து பொறிவண் டார்ப்ப*

*இந்திர தனுவென விலங்கக மூடுத்து*

*(ம.மே. 28: 5-22)*

மகளிர் தங்களது கரிய கூந்தலை நறுமணக் கலவையினைக் கலந்து நீராட்டிய நீரானது வீட்டுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரோடு கலந்து சாக்கடைக்குச் சென்றது. அந்தச் சாக்கடைகள் கற்களால் மூடி வெளியே கடத்தப்பட்டன. மக்கள் தமக்கு வேண்டிய அளவிற்குத் தண்ணீரைக் குறைக்கவும் கூட்டவும் எந்திரங்களை அமைத்துப் பொய்கைகளில் நீர் நிரப்பி யுள்ளனர். அங்கு மகளிரும் மைந்தரும் கலந்து நீராடியதால் அவர்கள் அணிந்திருந்த சாந்தானது நீரில் கரைந்து கலந்திருந்தது. சிவிறி, கொம்பு எனும் இரண்டு கருவிகளால் பீய்ச்சி அடிக்கும் நறுமண நீர், மிக்க தவமுடைய தவசீலர்களின் திருப்பாதங்களை ஐவகை சீலங்கை உடைய உபாசகர்கள் தங்கள் சிவந்த கைகளால் விளக்குகின்ற நன்னீர், இல்லற மக்கள் அமைத்த தண்ணீர்ப் பந்தர்களில் அகில் முதலான நறுமணப் பொருள்களைப் புகைப்பதால் அப்பந்தர் குடங்களிலிருந்து ஊற்றுகின்ற நீர், இல்லங்களில் ஊற வைக்கப்பட்டுள்ள விரைக்கலவைகளின் வளம் மிக்க மனைகளின் நீர் எனப் பல வகையான மணம் பரப்பும் நீர்த்தாரைகளே அங்கு எங்கும் பாய்ந்திருந்தன. அதனால் கராம் மற்றும் இடங்கர் எனும் இரு வகையான தோற்றத்தில் மாறுபாடு கொண்ட முதலை வகைகளும், மீன் வகைகளும் தம்முடைய புலால் நாற்றம் நீங்கி, வண்டினங்கள் தேனை விரும்பி மொய்க்கும் பொருட்டு வானவில்லைப் போல விளங்குகின்ற அகழியில் குவிந்திருந்தன.

வஞ்சியின் இந்த ஊரமைப்பு மதுரை

மாநகர் அமைப்பினை ஒத்திருந்தது. ஆயின் மதுரையில் அகழியானது வைகை ஆற்றோடு இணைக்கப்பட்டிருக்க, இவ்வூர் அகழி நீரானது பல்வேறு மணம் கலந்து வீடுகளில் இருந்து வரும் நீரால் நிரம்பி இருந்துள்ளது. இதில் முதலைகள் விடப் பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### மதில்

நகரமைப்பு முறையில் அகழிக்கு அடுத்துப் பாதுகாப்பு நல்குவது மதில் ஆகும். வஞ்சி மாநகரில் இடம் பெற்றிருந்த மதில் பல்வேறு கருவிகள் கொண்டிருந்தது.

*வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய*

*கடிமதி லோங்கிய இடைநிலை வரைப்பில்*

*————*

*நெடுநிலை தோறு நிலாச்சுதை மலரும்*

*கொடிமிடை வாயில் குறுக்கினாள் புக்கு*
*(ம.மே. 28: 23-28)*

பகைநாட்டவர் போர் கருதி வந்து மதிலை வளைத்த பொழுதில், தாமாகவே அவர்களைத் தாக்கும் இயந்திரங்களை இம்மதில் கொண்டு இருந்தது. இதன் அமைப்பு மதுரையின் மதில் அமைப்போடு பெரிதும் இயைபு கொண்டிருக்கிறது. இம்மதிலை அடுத்து அடர்ந்த காவற்காடு இருந்துள்ளது. இங்குக் காவல் வீரர்கள் கண்காணிப்புப் பணியில் இருந்துள்ளனர். மதிலுக்கும் ஊர்க்கும் இடையே அமைந்துள்ள இந்தக் காவற்காடு பசுமையானதாக இருந்துள்ளது. மிளைக்காடுகள் என்பன மதிலுக்குப் புறப்பகுதியில் அமைக்கப்படுவன. மதிலும், அகழியும், மிளையும் ஊரின் தன்மை மற்றும் நிலவியலுக்கு ஏற்ப அன்று உருவாக்கப் பட்டிருந்தன. இந்தப் பசுமையான அடர்ந்த காவற்காட்டினைக் கடந்துதான் ஊருக்குள் யாரும் செல்ல முடியும். ஊரினது தொடக்கப் பகுதியில் கொடிகள் ஓங்கிய பல வகைத் தொழில் செய்வோர் வீடுகள் அமைந்திருந்தன. அழகியவேலைப்பாடுகளும், கொடிகளும் உடைய வாயிலும் கொண்டு வஞ்சி மாநகர் கட்டமைக்கப்பட்டிருந்தது.

### தெருக்கள் அமைப்பு முறை

மதுரையிலும், காவிரிப்பூம்பட்டினத்திலும் இடம்பெற்றிருந்த தெருக்கள், வணிக வீதிகள் போலவே வஞ்சி மாநகரிலும் மக்களின் வாழ்விடங்கள் அமைந்திருந்தன. காவற்காட்டை ஒட்டிய பகுதிகளில் வாயிற்காவலர்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள்தம் வாழ்விடம் அகன்று பெரிதாக இருந்தது. அவ்வாழ்விடத்தைத் தொடர்ந்து பல வகைத் தொழிலாளர்கள் வாழும் சிறிய / பெரிய தெருக்கள் அமைந்திருந்தன. பல வகை மீன்களைக் கூவி விற்பவர், உப்பு விற்பவர், கள் விற்பவர், பிட்டு வணிகர், அப்ப வணிகர், இறைச்சி விற்பவர், வெற்றிலை விற்பவர், பஞ்சவாசம் விற்பவர் என்போர் வாழும் தெருக்கள் முறையாக அமைக்கப் பட்டிருந்தன.

இத்தெருக்களை அடுத்துப் பொன், செம்பு, தச்சு, சுதை, ஓவியம், தோற்கருவி செய்யும் தொழிலாளர்கள், தோலைத் தைப்பவர், மாலைகளைத் தொடுப்போர், சோதிடர், இசை விற்பன்னர், வெண் சங்குகளை அறுத்து வளையல் செய்வோர், முத்துக்களைக் கோர்ப்போர், அரசவை யிலும் மற்றும் பொது மன்றங்களிலும் நடனமிடும் கூத்தியர் என்போர் வாழ்ந்த தெருக்கள் இடம்பெற்றிருந்தன. இத்தெரு க்களைத் தொடர்ந்து, எண்வகைக் கூலக் கடைத்தெரு, அரசின் புகழ் பாடுவோர் வாழ்தெரு, நாழிகைகளைத் துல்லியமாகக் கணிப்போர் தெரு, பொதுமகளிர் தெரு, நூலாடை நெய்வோர் தெரு ஆகியன இடம்பெற்றிருந்தன.

இத்தெருக்களை அடுத்து பெரிய வணிகர் களின் குடி இருப்புகளும் மன்னரின் அரண்மனையும் வீற்றிருந்தன. பொற் கொல்லர் தெரு, நவரத்தினங்களை விற்போர் தெரு, வேதம் ஓதும் அந்தணர் தெரு, அரச மரபினர் வாழ் தெரு, அமைச்சர்கள் வாழ் தெரு, படைத் தலைவர் மற்றும் அரசாங்க உயர் அலுவலர் வாழ் தெரு என்பன நகரின் மையத்தில் இடம்பெற்றிருந்தன. இங்ஙனம் தெருக்கள் அமைந்த நகரின் நடுவே மன்றங்களும், அம்பலம், முச்சந்தி, நாற்சந்தி என்பனவும் ஓர் ஒழுங்கு முறையோடு வஞ்சி மாநகரில் வீற்றிருந் தன. இச்செய்தி கீழ் வரும் மணி மேகலைத் தொடர்களால் புலப்படுகிறது.

*கடைகாப் பமைந்த காவ லாளர்*

*மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும்*

*பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்*

.............................................................

*பாண ரென்றிவர் பல்வகை மறுகும்*

.................................................................

*வேத்தியல் பொதுவிய லென்றிவ் விரண்டின்*

*கூத்தியல் பறிந்த கூத்தியர் மறுகும்*

*பால்வே றாக வெண்வகைப் பட்ட*

*கூலங் குவைஇய கூல மறுகும்*

*மாகதர் சூதகர் வேதாளிகர் மறுகும்*

.........................................................

*மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்* (ம.மே. 28: 29-59)

இந்த மாநகரில் மாடங்கள் பல இருந்துள்ளன. அதிலிருந்து வரும் காற்றால் கொடிகள் அசைந்தன. கொடிகள் விளங்கிய தெருவில் நெய் ஊற்றப்பட்டு விளக்குகள் எரிந்தன. விளக்கின் வெளிச்சத்தில் விறலியர் நடனம் புரிந்திருந்தனர்.

*வரைமிசை இழிதரும் அருவியின் மாடத்து*

*வளிமுனை அவிர்தரும் கொடிநுடங்கு தெருவில்*

———

*நன்னுதல் விறலியர் ஆடும்*

*தொன்னகர் வரைப்பின்* (ப.ப. 5/47:3-8)

இத்தகைய வஞ்சி மாநகரின் அமைப்பு குறித்துச் சிலப்பதிகாரம் மேலும் விவரிக்கிறது. இந்நகரில் அமைந்திருந்த தெருக்கள், அரண்மனை குறித்தும் பல செய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப் படுகின்றன. வஞ்சி மாநகரில் பல வண்ணக் கொடிகள் வரிசையாகப் பறந்திருக்கின்றன. மேல் விதானமும் நீண்ட மதிலும் உடைய நெடுவீதிக்குள் தேர்கள் நின்றிருக்கின்றன. சிறியதும் பெரியதுமான குன்றுகளைப் போல் இருக்கும் வீடுகளையும், குறுக்கும் நெடுக்குமாகப் பல தெருக்களையும் இம்மாநகர் கொண்டிருந்தது.

*கொடும்பட நெடுமதில் கொடித்தேர் வீதியுள்*

*குறியவும் நெடியவும் குன்று கண் டன்ன*

*உறையுள் முடுக்கர் ஒருதிறம் போகி*

(சி.அ. 27: 152-154)

வஞ்சி நகரின் பல வகைப்பட்டோர் வாழ் தெருக்கள் பற்றிய பதிவுகள் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இடம்பெற்றிருப்பினும் இவற்றின் அமைவிடத் திசைகள் குறித்து ஏதும் குறிப்பு இல்லை. பெரிய தெருக்களும், அதிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய தெருக்கள் பலவும் இருந்துள்ளன. பெரியதும்/சிறியதுமான குன்றுகளை ஒத்துள்ள வீடுகள் இருந்துள்ளன. அவை யாவும் காற்று உள்ளே புகும்படியாகக் கட்டப்பட்டிருந்தன. சிறியதும் பெரியதுமான வீடுகள் கொண்டு வஞ்சி மாநகர் ஓர் 'அணிநகர்' (சி.அ. 25: 194) என விளங்கியது.

இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தன் பழம்பெரும் வஞ்சி நகரில் மனிதர்க்கு அப்பாற்பட்ட சக்தியாய் விளங்கும் பூதத்தை வேற்றுலகில் (தேவலோகத்தில்/அமராபதியில்) இருந்து கொணர்ந்து தனது நகரில் நிறுவினான்; அதன் மூலம் தனது நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தினான்; அப் பூதத்திற்குப் படையல் இட்டு அமர்த்தினான். இச்செய்திகள் பதிற்றுப் பத்து ஒன்பதாம் பத்தின் பதிகத்தில் இடம்பெற்றுள்ளன.

*மந்திர மரபில் தெய்வம் பேணி*

*மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானை*

*புரையறு கேள்விப் புரோசு மயக்கி*

*அருந்திறல் மரபின் பெருஞ்சதுக்கு அமர்ந்த*

*வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ*

*ஆய்ந்த மரபின் சாந்தி வேட்டு* (ப.ப.9: 10-15)

இதே செய்தியைச் சிலப்பதிகாரமும், "சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து/ மதுக்கொள் வேள்வி வேட்டோன்" (சி.அ. 28: 147-148) எனக் குறிப்பிடுகின்றது.

## முசிறி

சேரர்களின் துறைமுகப் பட்டினங்களுள் ஒன்று முசிறி. இப்பட்டினம் மேற்குக் கடற்கரையில் சுள்ளி மற்றும் பேரியாறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்து

ள்ளது. சேரர் மலைநாட்டில் மிளகு, ஏலம், இலவங்கம் என்ற உணவு மணப்பொருள்கள் மிகுதியாக விளைந்தன. இந்த வாசனைப் பொருள்கள் கடல் வழியாகப் பல ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின. யவனர்கள் பொன்னைக் கொடுத்து மிளகைப் பெற்றுச்சென்றுள்ளனர். என அகநானூறு குறிப்பிடுகிறது. (அ.நா.149:8-11). புறநானூற்றுக் கவிதை ஒன்றிலும் முசிறித் துறைமுகப்பட்டினம் குறித்த செய்தி காணப்படுகிறது. கடல் வழி வந்த பிற நாட்டுப் பொருள்கள் தோணிகள் மூலம் கரையில் சேர்க்கப்பட்டன. ஆறும் கடலும் கலக்கும் துறைமுகத்தில் நிற்கும் பெரிய நாவாய்கள் மூலம் வரும் பொருள்களும் சிறிய தோணிகள் மூலமே கரை சேர்க்கப்பட்டன. காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த இத் துறைமுகம் காவிரிப்பூம்பட்டினத் துறை முகம் போல ஆழம் கொண்டதாக இருக்கவில்லை. (பு.நா. 343: 4-10).

இத்துறைமுகத்தில் வடக்குத் தெற்காக வும், கிழக்கு மேற்காகவும் வீதிகள் அமைந்திருந்தன (வேங்கடசாமி 2001: 282). இந்தப் பட்டினத்தில் யவனர்கள் தங்கிய பகுதி பந்தர் (யவனச்சேரி) எனப்பட்டது. பந்தரில் முத்துகள் விற்கப் பட்டன. இதன் அருகில் அமைந்திருந்த கொடுமணம் என்னும் ஊரில் செய்யப் பட்ட அழகிய வேலைப் பாடமைந்த பொன் நகைகள் உலகப்புகழ் பெற்றிருந்தன.

## முடிவுரை

சேரர்களின் தலைநகரமாக விளங்கிய வஞ்சி பொருணை ஆற்றின் கரையின் திறம்பட உருவாக்கப்பட்டிருந்தது. இதன் மையத்தில் மன்னரின் அரண்மனை கட்டப்பட்டிருந்தது. வஞ்சியின் புறநகர் பகுதியில் சமயக்கணக்கர் பலர் இருந்து தத்தம் சமயக்கொள்கைகளை எடுத்தோதி வந்தனர். இப்பகுதியில் குனவாயிற் கோட்டமும், வேளாவிக்கோமாளிகையும் இருந்ததுள்ளது. புறநகரை அடுத்தமைந்த அகநகர் பகுதியில் அகழி இருந்தது. அதில் இறங்குவோரை கொள்ளும் தன்மையுடைய முதலைகள் விடப் பட்டிருந்தன. அடுத்ததாக உறுதியான மதிலும் அரிதான காவற்காடும் இருந்துள்ளன. வஞ்சி மாநகரத்தில் தெருக்கள் திட்டமிட்டு கட்டமைக்கப் பட்டிருந்தன. அவற்றின் திசைகள் மற்றும் அளவுகள் குறித்த செய்திகள் காணப் பெறவில்லை. நகரின் பாதுக்காப்பிற்கு வலிவூட்ட தெய்வசக்திகளும் நிறுவியதை அறிய முடிகிறது. சேரர்களின் துறைமுகப் பட்டினங்களுள் ஒன்றான முசிறி மேற்குக் கடற்கரையில் சுள்ளி மற்றும் பேரியாறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது. இங்கு பிற நாட்டினர் வந்து வாணிபம் செய்தனர்.

## துணைநூற் பட்டியல்


1. *அகநானூறு (மணிமிடைப்பவளம்)*, 2007 (1944), ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா. வேங்கடாசலம் பிள்ளை (உ.ஆ), சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
2. *சிலப்பதிகாரம்*, 2014, ந.மு. வேங்கடசாமிநாட்டார் (உ.ஆ), சென்னை: ராமையா பதிப்பகம்.
3. *பதிற்றுப்பத்து*, 2007 (1950), சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), சென்னை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. *புறநானூறு*, 2007 (1947), சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), சென்னை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. *மணிமேகலை*, 2015, ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, (உ.ஆ), சென்னை: சாரதாப் பதிப்பகம்.
6. இராசமாணிக்கனார், மா., 2012, *பத்துப்பாட்டு ஆராய்ச்சி*, புது தில்லி: சாகித்ய அகாதெமி.
7. பார்த்தசாரதி, நா., 1992, *பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்*, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
8. வேங்கடசாமி, சீனி., 2011, *பழங்காலத் தமிழர் வாணிகம்*, சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம்.